**மேலூர் அரசு கலைக் கல்லூரி முதல்வரின்(மு.கூ.பொ.)செயல்முறைகள்**

**பிறப்பிப்பவர் : முனைவர் அ.அந்தோணிசெல்வராஜ், எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,**

**ந.க.எண்.5278/இ/2023, நாள்: 25.03.2025.**

பொருள் : கல்லூரிக் கல்வித் துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி – திரு.கி.ராம்சங்கர் இளநிலை உதவியாளர் – கருணை அடிப்படையில் பணிஒதுக்கீடு செய்யப்பட்டு பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறைப் படுத்தி ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை : 1) சென்னை-15, கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ.) அவர்களின் செயல்முறைகள் ப.மு.எண்.28213/பி2/2023, நாள்.27.09.2023.

2) இக்கல்லூரி முதல்வரின் செயல்முறைகள் ந.க.எண்.5278/இ/2023, நாள்.05.10.2023.

3) அரசாணை (நிலை) எண்.100 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள்.01.08.2018.

4) சென்னை-6,அரசுத் தேர்வுகள் இயக்ககம், இணை இயக்குநர் (பணியாளர்) அவர்களின் கடிதம் ந.க.எண்.200231/வி3/2024, நாள்.24.01.2025.

------

**ஆணை:-**

பார்வை(1)இல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ.) அவர்களின் செயல்முறைகளில் மேலூர் அரசு கலைக் கல்லூரியில் காலியாக இருந்த இளநிலை உதவியாளர் பணியிடத்திற்குக் கருணை அடிப்படையில் பணி ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு.கி.ராம்சங்கர் என்பார் பார்வை (2)இல் காணும் மேலூர் அரசு கலைக் கல்லூரி முதல்வர் அவர்களின் செயல்முறைகளில் பணி நியமன ஆணை வழங்கப்பட்டதன்படி 13.10.2023 முற்பகல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்தார்.

பார்வை(3)இல் காணும் அரசாணையில் கருணை அடிப்படைப் பணிநியமனம் பெற்றோருக்கு பணிவரன்முறைப் படுத்த தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய இசைவு பெறும் நடைமுறை விலக்கிக் கொள்ளப்பட்டதன்படியும், பார்வை(4)இல் காணும் அரசுத் தேர்வுகள் இணை இயக்குநரின் கடிதத்தில் வழங்கப்பட்ட தனியரின் பத்தாம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் உண்மைத் தன்மைச் சான்றின்படியும் இக்கல்லூரியின் இளநிலை உதவியாளர் திரு.கி.ராம்சங்கர் என்பாருக்கு அன்னார் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த 13.10.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. இவ்வாணையை தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் செய்யவும் ஆணையிடப்படுகிறது.

முதல்வர்(மு.கூ.பொ.)

முதல்வர் (மு.கூ.பொ.)
அரசு கலைக் கல்லூரி, மேலூர்
மதுரை மாவட்டம்-625 106

25/3/25

பெறுநர்

திரு.கி.ராம்சங்கர்,
இளநிலை உதவியாளர்.
அரசு கலைக் கல்லூரி,
மேலூர் - 625 106.

**நகல்:**

கல்லூரிக் கல்வி ஆணையர்,
கல்லூரிக் கல்வி இயக்ககம்,
சென்னை – 15. (தகவலுக்காகப் பணிந்தனுப்பலாகிறது)

உபரி -3